


கரூர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில், தலைமைக் கழக பிரதிநிதிகள் தி.அ.முகமது சகி, பெரம்பலூர் பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்.

## சேலம் மத்திய மாவட்டக் கழக அவைத் தலைவர்

# ஜி.கே.சுபாசுக்கு அண்ணா விருது!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பாராட்டு!

சேலம், செப். 10 -

சேலம் மத்திய மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் 08.09.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தலைமைக் கழக பிரதிநிதி நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் கிரிராஜன் தலைமையிலும், தலைமைக் கழகப் பிரதிநிதி கழகத் தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அழகிரி சதாசிவம் முன்னிலையிலும் மாவட்டக் கழக அலுவலகமான ”கலைஞர் மாளிகை“யில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தீர்மானம் :

2026 செப்டம்பர் 15ந் தேதி நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் நமது கழகத்தின் உயிரனைய கழகத் தலைவர் அவர்களால் நமது சேலம் மத்திய மாவட்டக் கழகத்தின் அவைத்தலைவர் ஜி.கே. சுபாசு பேரறிஞர் அண்ணா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த விருதினை நடைபெறக்கூடிய கழக முப்பெரும் விழாவில் நமது கழகத்தின் ஒப்பற்ற உயிரனைய கழகத் தலைவர் கரங்களால் ஜி.கே.சுபாசு பெற்றுக் கொள்ளப்போகிறார் என்பது நமது சேலம் மத்திய மாவட்டக் கழகத்திற்கு மிகுந்த பெருமை சேர்க்கின்ற வகையில் அமைந்துள்ளது.

ஜி.கே.சுபாசு 16.10.1937 ஆண்டு பிறந்தார். இயக்கத்தின் மீதும், இயக்கக் கொள்கைகள் மீதும் மிகுந்த பற்று கொண்டிருந்த காரணமாக தன்னை 1953ம் ஆண்டு கழகத்தில் இணைத்துக் கொண்டு கழகப் பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு பணியாற்றி வந்தார். இவர் அஞ்சாநெஞ்சம் படைத்த போர்குணம் கொண்டவராக கழகத்தில் பணியாற்றி வருகிறார். கழகத்திற்கும் கழகத் தோழர்களுக்கும் சிறு இன்னல்கள் ஏற்பட்டாலும் முதல் நபராக நின்று போராடும் குணம் கொண்டவர். இவர் 1964ஆம் ஆண்டு சேலம் மாவட்ட லாரி டிரைவர்கள் மற்றும் கிளீனர்கள் சங்கத்தின் மாவட்ட செயலாளராக பணியாற்றியுள்ளார்.

சேலம் மாநகர கழக அமைப்பாய் உருவாகும் முன்பே சேலம் நகர செயலாளராக 1969 முதல் 1976 வரை கழகப் பணியாற்றினார். மீண்டும் 1983 முதல் 2009 வரை 26 ஆண்டுகள் தொடர்ந்து மாநகர செயலாளராக பணியாற்றினார் என்பது இவரது அயராத உழைப்பிற்கு எடுத்துக் காட்டாகும்.

மேலும் 1990 ஆம் ஆண்டில் சேலம் நகர கூட்டுறவு வங்கியின் தலைவராக பொறுப்பேற்று வங்கியின் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர். சேலம் மாநகராட்சியின் முதல் துணை மேயராக 1996 முதல் 2001 வரை பொறுப்பு வகித்தார். எந்த ஒரு கழகப் பணியிலும் முழு ஈடுபாடு கொண்டு பணியாற்றி வருபவர், அதன் காரணமாக பல்வேறு பொறுப்புகளை வகித்தார்.

தென்னவர் முத்தமிழ் மன்ற செயலாளர், K.V.K சாமி நினைவு படிப்பக செயலாளர், சேலம் நகர மன்ற உறுப்பினர். கழகத் தலைவர் கலைஞர் அவர்களால் 1983ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ”சுபாஷ் இனி சபாஷ்“ என்று அன்போடு பாராட்டப்பட்டவர்.

இவர் கழகத்தின் இணைந்தது முதல் பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றுள்ளார். 1965இல் இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், சேலம் நகர கைத்தறி போராட்டத்தில் தலைமை தாங்கி கடை அடைப்பு போராட்டம், பால் கமிஷன் அறிக்கை வெளியிட்டதையொட்டி தலைவர் கலைஞர் அவர்களின் கைது கண்டித்து போராட்டம், இலங்கை தமிழர்களுக்கான மறியல் போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம், 1986ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி கொடும்பாவி எரித்து கைதாகி மாவட்டக் கழக செயலாளர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்களுடன் தண்டனை கைதியாக 2வாரம் சிறை. தற்போது வரை கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டுள்ளார்.

இவர் கழகத்தில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார். நகர செயலாளர், மாநகர செயலாளர், மாநகர அவைத் தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர், தற்போது மாவட்ட அவை தலைவராக திறம்பட பணியாற்றி வருகிறார்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஜி.கே.சுபாசு பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நமது உயிரனைய கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் மீதும் மாறா பற்று கொண்டு கழகம் தான் உயிர் மூச்சு என கழகத் தலைமைக்கு விசுவாச மிக்க தொண்டனாக வீரத்தோடும், விவேகத்தோடும் பணியாற்றி வரும் செயல்வீரர் ஜி.கே.சுபாசு ஆவார்.

அவரது கழகப் பணியினை சிறப்பிக்கும் வகையில் நமது ஒப்பாரும் மிக்காரும் இல்லா கழகத் தலைவர் தளபதி அவர்கள் பேரறிஞர் அண்ணா விருதினை அவருக்கு வழங்குவதாக அறிவித்திருப்பது குறித்து சேலம் மத்திய மாவட்டக் கழகம் மிகுந்த பெருமை கொள்கிறது. கழகத் தலைவர் தாயுமானவர் அவர்களுக்கு சேலம் மத்திய மாவட்ட கழகம் நெஞ்சார்ந்த நன்றியை நன்றி பெருக்குடன் தெரிவித்துக்கொள்கிறது.

மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., மாவட்ட அவைத் தலைவர் ஜி.கே.சுபாசு, துணை செயலாளர்கள் திருநாவுக்கரசு, கோமதி மற்றும் ராஜேந்திரன், மணி, தாமரைக் கண்ணன், ரகுபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கடையம் ஒன்றியம் வெங்கடாம்பட்டி ஊராட்சி நெல்லையப்பபுரம் 20 ஆண்டுகாலம் பணியாற்றிய முன்னாள் கிளைச் செயலாளர் எல்பி என்கிற பிள்ளை பெருமாள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு பின்னர் வீட்டில் ஓய்வு எடுத்து வருவதை அறிந்த கழகத்தின் வேர்களை காப்போம் என்ற உன்னதமான நோக்கத்தில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் அவரை நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்து பழங்கள் மற்றும் மருத்துவ உதவி தொகை வழங்கினார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன் ஒன்றிய கவுன்சிலர் சங்கர், அவைத்தலைவர் ரவி,மாவட்ட பிரதிநிதிகள் ரவி சுப்பிரமணி, துரைப்பாண்டியன்,அன்பழகன்,ஆத்மா சேர்மன்,குணசீலன் கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன்,ஊராட்சி மன்ற துணைத் தலைவர் லட்சுமணன்,பாக முகவர்கள் பாலகிருஷ்ணன்,விடியல் ஆர்த்தி,ராஜபாண்டியன்,ராமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் – மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ. நல்லதம்பி, டாக்டர் ஆர்.கோகுல்கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

## சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# எடப்பாடி - மேட்டூர் - சங்ககிரி சட்டமன்றத் தொகுதி நிர்வாக வாரியாக கழக மறு சீரமைப்பு குறித்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயற்குழுக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு செயலாளர், வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு மற்றும் கிளை கழக செயற்குழுக் கூட்டம் சேலம் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., தலைமையில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

### 86 – எடப்பாடி சட்டமன்றத் தொகுதி

தேதி : 10.09.2026 - வியாழக்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த கொங்கணாபுரம் ஒன்றியம், கொங்கணாபுரம் பேரூர் | காலை 9.00 | என்.பி.டி.மஹால், கொங்கணாபுரம் |
| 2 | எடப்பாடி நகரம் | காலை 10.00 | நகர செயலாளர் பாஷா இல்லம் |
| 3 | ஒருங்கிணைந்த எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி பேரூர் | மதியம் 2.00 | எம்.ஏ.ஏ.திருமண மண்டபம், வேம்பனேரி |
| 4 | ஒருங்கிணைந்த நங்கவள்ளி ஒன்றியம், நங்கவள்ளி பேரூர், வனவாசி பேரூர், ஜலகண்டாபுரம் பேரூர், பி.என்.பட்டி பேரூர், வீரக்கல்புதூர் பேரூர் | மாலை 4.00 | எஸ்.ஆர்.கே.மஹால், சக்தி கைலாஷ் கல்லூரி அருகில், நங்கவள்ளி. |

### 85 –மேட்டூர் சட்டமன்றத் தொகுதி

தேதி : 11.09.2026 - வெள்ளிக்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | கொளத்தூர் ஒன்றியம், கொளத்தூர் பேரூர் | காலை 9.00 | லட்சுமி திருமண மண்டபம் கொளத்தூர் |
| 2 | மேட்டூர் நகரம் | காலை 11.00 | கற்பகம் திருமண மண்டபம், மேட்டூர் அணை – 1 |
| 3 | ஒருங்கிணைந்த மேச்சேரி ஒன்றியம், மேச்சேரி பேரூர் | மதியம் 3.00 | வி.எஸ்.எஸ்.ஆர் திருமண மண்டபம், பென்னாகரம் ரோடு, மேச்சேரி |

### 87 – சங்ககிரி சட்டமன்றத் தொகுதி

தேதி : 11.09.2026 - வெள்ளிக்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த மகுடஞ்சாவடி ஒன்றியம் | மாலை 4.00 | ஹாட்டல் சரவணபவன், வைகுந்தம் |
| 2 | ஒருங்கிணைந்த சங்ககிரி ஒன்றியம், சங்ககிரி நகரம், தேவூர் பேரூர், அரசிராமணி பேரூர் | மாலை 5.00 | பார்வதிபாய் திருமண மண்டபம், திருச்செங்கோடு மெயின்ரோடு, சங்ககிரி. |

### 87 – சங்ககிரி சட்டமன்றத் தொகுதி

தேதி : 12.09.2026 - சனிக்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | இடங்கணசாலை நகரம் | மதியம் 2.00 | நகர கழக அலுவலகம், இடங்கணசாலை |
| 2 | தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | மதியம் 3.00 | சமுதாயக்கூடம், பாப்பம்பாடி |
| 3 | தாரமங்கலம் நகரம் | மாலை 4.00 | சின்னதங்கம் மண்டபம், முத்துமுனியப்பன் கோவில் அருகில், தாரமங்கலம் |

மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் கழக மறு சீரமைப்பு குறித்து ஒன்றிய, நகர, பேரூர் கழக செயற்குழுக் கூட்டங்களில் அந்தந்த நிர்வாகங்களுக்குட்பட்ட மாவட்ட, தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
சேலம் மேற்கு மாவட்ட
கழக செயலாளர்




ஓசூரில் நடைபெற்ற கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் அவைத் தலைவர் யுவராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் ,கிருஷ்ணகிரி மாவட்ட கழக மறுசீரமைப்புப் பணிகளுக்காக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தலைமைக் கழகப் பிரதிநிதிகளான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப. ராணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன்,ஓசூர் துணை மேயர் ஆனந்தய்யா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.